Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, ஆகஸ்ட் 17, 2024 | இதழ் 126

# இந்திய நாணயத்தில் தமிழினத் தலைவர் கலைஞர்! நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் மகிழ்ச்சிப் பெருமித மடல் - மு க ஸ்டாலின்



சென்னை, 17 ஆகஸ்ட் 2024: நூற்றாண்டு நாயகராம் நம் உயிர்நிகர் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை என்றென்றும் நம் உள்ளத்தில் வைத்துக் கொண்டாடுகிறோம். எந்நாளும் நம் இல்லத்தில் வைத்துக் கொண்டாடுகிறோம். அரை நூற்றாண்டுகாலம் தி.மு.கழகத்தைக் கட்டிக்காத்து, பேரியக்கமாக வளரச் செய்த தலைவர் கலைஞருக்குக் கழகத்தின் சார்பில் தலைமைக் கழகம் தொடங்கிக் கிளைக் கழகங்கள் வரையிலும் கொண்டாட்டம்தான்!

ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று அரிய பல திட்டங்களால் நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்த சிற்பிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் மாவட்டங்கள்தோறும் கொண்டாட்டங்கள். இன்னும் கலையுலகினர், படைப்பாளர்கள், இலக்கிய அமைப்புகள், வெளிநாடுவாழ் தமிழர்கள் என எங்கெல்லாம் தமிழ் ஒலிக்கிறதோ, எவ்விடமெல்லாம் தமிழர்களும் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டை உணர்வுப்பூர்வமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

வங்கக் கடற்கரையில் தன் அண்ணனின் அருகில், சொன்ன சொல்லைக் காப்பாற்றும் வகையில், அவரிடம் இரவலாக வாங்கிய இதயத்தை ஒப்படைத்து, ஒய்வெடுக்கும் ஓய்வறியாச் சூரியனாம் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞருக்கு அருங்காட்சியகத்துடனான நினைவிடம் அலைகடலின் தாலாட்டும் இசையின் பின்னணியுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் பெயரால் சென்னையில் பன்னோக்கு மருத்துவமனை, மதுரையில் நூற்றாண்டு நூலகம், கிளாம்பாக்கத்தில் பேருந்து முனையம் எனத் தன் வாழ்நாளெல்லாம் தமிழ்மக்கள் பயன்பெறப் பாடுபட்ட தலைவரின் புகழ்போற்றும் வகையில் பயனுள்ள கட்டமைப்புகள் அவருடைய நூற்றாண்டில் உருவாகியுள்ளன. உருவாக்கப்பட்டும் வருகின்றன. மாவட்டங்கள்தோறும் கழகத்தினர் நிறுவிய சிலைகள், அறக்கட்டளை சார்பில் திருவாரூரில் கலைஞர் கோட்டம், கழக அமைப்புகளின் சார்பில் பல்வேறு நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், அரசியல் உலகம் இதுவரை காணாத பன்முக ஆற்றல் கொண்ட தலைவர் கலைஞரை அவருடைய உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் தங்கள் இதயத்தில் சுமந்து ஒவ்வொரு நாளும் கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தியாவில் இன்னொரு தலைவருக்கு இந்த அளவில் நூற்றாண்டு விழாவினைத் தங்கள் குடும்ப விழா போலக் கொண்டாடியிருப்பார்களா என்கிற அளவிற்கு நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா எத்திசையும் புகழ் மணக்கக் கொண்டாடப்படுகிறது. இந்தியாவின் கூட்டாட்சிக் கருத்தியலை வலுப்படுத்தும் வகையில் மாநில சுயாட்சியின் உரிமைக் குரலாகத் தொடர்ந்து முழங்கியவரும், இந்திய ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பதில் பல்வேறு அரசியல் தலைவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவரும், பல குடியரசுத் தலைவர்களையும் - பிரதமர்களையும் தேர்வு செய்வதில் முக்கியப் பங்காற்றியவருமான நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரை அவரது நூற்றாண்டில் போற்றுகிற வகையில் இந்திய ஒன்றிய அரசின் சார்பில் ஆகஸ்ட் 18 ஞாயிறு மாலை சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறும் சீர்மிகு விழாவில், ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்நாத் சிங் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞரின் உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயத்தினை வெளியிடவிருக்கிறார். நாடாளுமன்றத்தின் இரு அவைகளில் எதிலும் உறுப்பினராக இருந்திராத ஓர் அரசியல் தலைவரின் மறைவுக்கு நாடாளுமன்றத்தில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்றால் அது நம் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவின்போதுதான். 95 ஆண்டுகால வாழ்க்கையில் 81 ஆண்டுகாலப் பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரரான முத்தமிழறிஞர் கலைஞரின் அரசியல் -நிர்வாகம் ௺ கலை ௺ இலக்கியம் ௺ திரைத்துறை - இதழியல் என பன்முகச் சாதனைகள் இந்திய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியவை. அவருடைய திறமை எல்லை கடந்த வரவேற்பைப் பெற்றவை. அதற்குக் காரணம், தலைவர் கலைஞரின் அத்தனை பங்களிப்புகளிலும் முதன்மை நோக்கமாக இருந்தது தமிழ் ௺ தமிழர் - தமிழ்நாடு இவற்றின் முன்னேற்றம்தான். அதனை அவர் சுயமரியாதை - சமூகநீதி என்ற மனித உரிமைக் கொள்கையின் வழியே நிறைவேற்றிக் காட்டினார். அந்தக் கொள்கையைத் தன்னுள் விதைத்த தலைவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் அவர் உருவாக்கிய நினைவுச் சின்னங்கள் வரலாற்றுப் பெருமையும் பண்பாட்டுச் சிறப்பும் கொண்டவையாகத் திகழ்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டையும் கண்ணீரில் தவிக்கவிட்டு மறைந்த பின், ஓராண்டு கடந்த நிலையில், 1970-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் நாள் சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில், அண்ணாவின் நினைவாக ஒன்றிய அரசின் சார்பில் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. உணர்வுப்பூர்வமான அந்த விழாவில் அப்போதைய ஆளுநர் உஜ்ஜல் சிங் அவர்களுடனும், ஒன்றிய அமைச்சர் ஷெர் சிங் அவர்களுடனும் முதலமைச்சரான தலைவர் கலைஞர் கலந்துகொண்டார். அண்ணாவின் அஞ்சல் தலை வெளியிடப்பட்டபோது, அதனைப் பார்த்த அத்தனை பேருக்கும் ஆச்சரியம். அஞ்சல் தலைக்கேற்ற பொருத்தமான முறையில் பேரறிஞர் அண்ணாவின் படத்தைத் தேர்வு செய்து தந்திருந்தவர் தலைவர் கலைஞர். அத்துடன், அந்தப் படத்தின் கீழே ‘அண்ணாதுரை’ என்று அண்ணாவின் கையெழுத்தையும் இடம்பெறச் செய்துவிட்டார் அண்ணாவின் தம்பியான நம் ஆருயிர்த் தலைவர் கலைஞர். இந்திய அஞ்சல் தலை ஒன்றில் தமிழ் எழுத்துகள் இடம்பெற்ற முதல் அஞ்சல்தலை என்பது பேரறிஞர் அண்ணா நினைவு அஞ்சல் தலைதான். அண்ணாவின் நூற்றாண்டு நிறைவின்போதும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐந்தாவது முறை பொறுப்பு வகித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 2009-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளன்று சென்னையில் நம் உயிர்நிகர் தலைவர் தலைமையில் நடைபெற்ற விழாவில், அப்போயை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒன்றிய அரசின் நிதித்துறை அமைச்சராக இருந்தவரும், பின்னாளில் தலைவர் கலைஞரின் ஆதரவுடன் இந்தியாவின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றவருமான மதிப்பிற்குரிய பிரணாப் முகர்ஜி அவர்கள் அண்ணாவின் உருவம் பொறித்த 5 ரூபாய் நாணயத்தை வெளியிட்டார். வரலாற்றுச் சிறப்பு மிகுந்த அந்த விழாவில், அப்போதைய துணை முதலமைச்சராக இருந்த உங்களில் ஒருவனான நான், அண்ணா நூற்றாண்டு இணையதளத்தைத் தொடங்கிவைத்து, அண்ணாவின் பொன்மொழிகள் நூலினை வெளியிட்டு உரையாற்றுகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தேன்.

பேரறிஞர் அண்ணாவின் நினைவாக வெளியிடப்பட்ட அஞ்சல் தலை போலவே, அவரது நினைவாக வெளியிடப்பட் நாணயத்திலும் ‘அண்ணாதுரை’ என்ற அண்ணாவின் கையெழுத்தை இடம்பெறச் செய்தவர், அண்ணாவின் இலட்சியங்களுக்கு ஆட்சி நிர்வாகத்தின் மூலமாகச் செயல்வடிவம் கொடுத்த அவரது தம்பியான தலைவர் கலைஞர்தான். இந்திய அரசின் நாணயத்தில் தமிழ் எழுத்துகள் முதன்முதலில் இடம்பெற்றதும் அப்போதுதான். எழுச்சியும் உணர்ச்சியும் மிகுந்த அந்த விழாவில் நாணயத்தை வெளியிட்ட திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள், நமது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, “மாபெரும் ஜனநாயகவாதி. மிகச் சிறந்த பேச்சாளர், தனிப்பெருமை படைத்த நாடாளுமன்றவாதி, மாபெரும் இலக்கியவாதி. ஓர் அரசியல் தலைவர் என்பவர் சமகாலத்திற்கு மட்டுமின்றி, எக்காலத்திற்கும் அரசியலில் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி இன்றளவும் ஒவ்வொருவரின் போற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்கிறார். அண்ணா காலத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவரது உரைகளைக் கேட்பது ஆனந்தமாக இருந்தது. அவர் அவையில் உரை நிகழ்த்தினால் நாடாளுமன்றத்தின் இதர பகுதிகளில் எவரும் இருக்கமாட்டார்கள். மாற்றுக்கட்சி உறுப்பினர்களும், மக்களவையிலிருந்து அமைச்சர்களும் அண்ணாவின் பேச்சைக் கேட்க மாநிலங்களவைக்கு வருவார்கள். அவருடைய பேச்சு அன்றும் இன்றும் இரசித்துப் போற்றப்படுகிறது” என்று புகழாரம் சூட்டினார். தலைமையுரையாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் அண்ணனின் பெருமைகளை இந்திய ஒன்றிய அமைச்சரும், இளைய தலைமுறையினரும் உணர்ந்து கொள்ளும் வகையில் உரை நிகழ்த்தினார். “அண்ணாவின் நாணயம் அரசியலில் எப்படிப்பட்டது என்பதை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அண்ணாவின் நாணயம் எத்தகையது என்பதற்கு அரசியல் வரலாற்றிலே எத்தனையோ கட்டங்கள் உண்டு, எத்தனையோ நிகழ்வுகள் உண்டு. அண்ணாவின் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடுகிற நேரத்தில் நான் விரும்புவது, மாநில அதிகாரங்களுக்கு வலு சேர்த்து, மாநில மொழிகள் மத்தியிலே உயர வேண்டும். சமநிலையை அடைய வேண்டும்” என்று அந்த விழாவிலும் அண்ணாவின் தம்பியாக மாநில உரிமைக்குரலையும், தமிழ் உள்ளிட்ட மொழிகளுக்கு இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமொழித் தகுதியையும் கோரினார் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர். எந்த இடமாக இருந்தாலும் அங்கே தமிழுக்காக வாதாடியவர் நம் தலைவர் கலைஞர். தன் 14 வயதில் தமிழ்க் கொடி ஏந்தி, மொழிப் போர்க்களம் புகுந்த அவர்தான், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தமிழுக்கு இந்திய அரசின் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்தார். தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைத் தேர்வு செய்து தமிழ்நாடு அரசு விழாக்கள், கல்வி நிலையங்களில் பாடச் செய்தார். செம்மொழி மாநாட்டினைச் சிறப்புடன் நடத்தி, அதில் தமிழ் இணைய மாநாட்டிற்கும் உரிய இடமளித்து, இன்று கணினியிலும் கைப்பேசியிலும் எல்லாரும் தமிழைப் பயன்படுத்துவதற்கான ஆக்கமாகவும் ஊக்கமாகவும் திகழ்ந்தார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிலைத்து வாழும் நம் அன்னைத் தமிழ், காலந்தோறும் வளர்ச்சி பெற்று வென்றிட வேண்டும் என்பதே முத்தமிழறிஞரின் மூச்சாகவும் செயலாகவும் இறுதிவரை இருந்தது.

தமிழாகவே வாழ்ந்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டின் நினைவாக வெளியிடப்படும் 100 ரூபாய் நாணயத்தில் முத்தமிழறிஞரின் உருவத்துடன் அவர் கையெழுத்திலான, ‘தமிழ் வெல்லும்’ என்ற சொற்களும் இடம்பெற்றுள்ளன. இமயத்தின் உச்சியில் கொடிநாட்டி, தமிழின் பெருமையை உயரச் செய்த சேரன் செங்குட்டுவனை வரலாறு பேசுவது போல, இந்திய அரசு தனது நினைவாக வெளியிடும் நாணயத்தில் தமிழைப் பொறித்து நம் தாய்மொழிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் தலைவர் கலைஞர். தமிழ்நாட்டின் அரசியலை அரை நூற்றாண்டு காலத்திற்கு மேல் இயக்கிய ஆற்றல் மிக்கவராகவும், இந்திய அரசியல் வரலாற்றில் தனித்துவம் மிக்க ஆளுமையாவும் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். எதிர்காலத் தலைமுறையினரின் கலங்கரை விளக்கமான நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் மகுடத்தில் மற்றுமொரு வைரமாக, அவரது உருவம் பொறித்த நாணயத்தை வெளியிடுகின்ற இந்திய ஒன்றிய அரசுக்குத் தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், முத்தமிழறிஞர் கலைஞரின் மகனாகவும் என் நன்றியையும், தலைவர் கலைஞரின் கோடானு கோடி உடன்பிறப்புகளின் நன்றியையும் உங்களில் ஒருவனாக உரித்தாக்குகிறேன். இனிமை மிகுந்த தமிழைத் தன் நா நயத்தால், கேட்போர் செவிகளுக்கெல்லாம் விருந்தளித்த தலைவர் கலைஞர், நாணயத்திலும் ’தமிழ் வெல்லும்’ என்பதை நிறுவியிருக்கிறார். இமயம் போல உயர்ந்து நிற்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழுக்குப் புகழ் சேர்க்கும் வகையில் இந்திய ஒன்றிய அரசின் சார்பில் வெளியிடப்படும் நாணய வெளியீட்டு விழாவில் உடன்பிறப்புகளைக் காண ஆவலாக இருக்கிறேன். இனிய விழா எனினும் எளிய விழா என்பதால் சென்னை மற்றும் சுற்றுப் பகுதிகளைச் சார்ந்த உடன்பிறப்புகள் நேரில் காணவும், தமிழ்நாட்டிலும், தமிழர்கள் வாழும் உலக நாடுகளிலும் நேரலையில் காணவும் அன்புடன் அழைத்து அகம் மகிழ்கிறேன்.

தமிழ் வெல்க! தமிழ் போன்ற நம் தலைவர் கலைஞர் புகழ் ஓங்குக!




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349

# "அந்தகன் படத்தை மிகப்பெரிய அளவில் வெற்றி பெறச் செய்த ஊடகத்தினருக்கும், ரசிகர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி - 'டாப் ஸ்டார்' பிரசாந்த்

## இந்தத் திரைப்படத்தில் பிரசாந்த் நாயகனாக இருந்தாலும் அனைத்து கேரக்டருக்கும் சமமான வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன் - இயக்குநர் தியாகராஜன்




சென்னை, 17 ஆகஸ்ட் 2024: ஸ்டார் மூவிஸ் சார்பில் சாந்தி தியாகராஜன் தயாரிப்பில், நடிகரும், இயக்குநருமான தியாகராஜன் இயக்கத்தில், 'டாப் ஸ்டார்' பிரசாந்த் நடிப்பில் ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி வெளியான 'அந்தகன்' திரைப்படம் - வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் பெரிய வெற்றியை பெற்றிருக்கிறது.

இதற்காக ஊடகத்தினருக்கும், ரசிகர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் விழா ஒன்றினை படக்குழுவினர் ஒருங்கிணைத்திருந்தார்கள். இந்த நிகழ்வு சென்னையில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்றது. இதில் இயக்குநர் தியாகராஜன், இயக்குநரும், நடிகருமான கே. எஸ். ரவிக்குமார், 'டாப் ஸ்டார்' பிரசாந்த், நடிகைகள் சிம்ரன், வனிதா விஜயகுமார், பிரியா ஆனந்த், செம்மலர் அன்னம், நடிகர் பெசன்ட் ரவி, கலை இயக்குநர் செந்தில் ராகவன், சண்டை பயிற்சி இயக்குநர் ராம்குமார், இயக்குநர் பிரவீண் காந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நடிகர் பெசன்ட் ரவி பேசுகையில், ''மகிழ்ச்சியாக இருக்கிறது. பிரசாந்துடன் நிறைய படங்களில் நடித்திருந்தாலும் அந்தகன் எனக்கு ஸ்பெஷல். படத்தினை விளம்பரப்படுத்துவதற்காக அவருடன் தமிழக முழுவதும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டேன்.

தியாகராஜன் மீது எனக்கு அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் படத்தைப் பற்றிய சிறிய சந்தேகம் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது. இந்த படத்திற்காக பிரசாந்த் உடன் சுற்றுப் பயணத்தில் இருக்கும் வரை இந்த படத்தை நான் பார்க்கவில்லை. பிரசாந்த் - தியாகராஜன் ஆகியோர் மீது இருந்த நம்பிக்கையின் காரணமாக அவர்களுடன் பயணித்தேன்.

அதன் பிறகு ஒரு நாள் தியாகராஜன் என்னை அழைத்து படத்தை காண்பித்தார். அதிர்ச்சியில் உறைந்தே போனேன். படம் மிக அழகாக இருந்தது. நேர்த்தியாக இருந்தது. படம் வெற்றி பெறும் என்பதை அப்போது உறுதி செய்தேன். இருந்தாலும் இந்த படத்தின் வெற்றி மீது எனக்கு சின்ன சந்தேகம் இருந்து கொண்டே இருந்தது. இருந்தாலும் படம் வெளியான முதல் நாள் முதல் காட்சி ரசிகர்களுடன் நான், பிரசாந்த், சிம்ரன் ஆகியோர் படத்தை பார்த்துக் கொண்டிருந்தோம்.

நடிகை வனிதா விஜயகுமார் பேசுகையில், "அந்தகன் படம் வெற்றி பெறுவதற்கு மனதார வாழ்த்திய ஊடகங்களுக்கும், திரையரங்கத்திற்கு வருகை தந்து வெற்றி பெற செய்த ரசிகர்களுக்கும் முதலில் நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். '90ஸ் கிட்ஸ்' என்ற வார்த்தையை கேட்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இதற்காக பிரசாந்த்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். '90ஸ் ஸ்டார்ஸ் கம் பேக்'. இதற்காக சிம்ரனுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் படத்திற்காக இணையதளத்தில் வெளியிடப்பட்ட பொதுமக்களின் கருத்தில் ஒரு முக்கியமான விஷயம் இடம் பிடித்திருந்ததை கவனித்தேன். படம் பார்க்கும்போது தியேட்டரில் யாரும் செல்போனை பார்க்கவில்லை என குறிப்பிட்டிருந்தனர். நானும் இந்த திரைப்படத்தை மூன்று முறை ரசிகர்களின் வரவேற்பினை காண்பதற்காக திரையரங்கத்திற்கு சென்றேன். அந்த தருணத்திலும் யாரும் செல்போனை பார்க்கவில்லை. அனைவரும் படத்தினை சீரியசாக பார்த்தனர். 90களில் ஒரு திரைப்படத்தை திரையரங்கத்திற்கு சென்று பார்க்கும் போது எம் மாதிரியான வரவேற்பு கிடைத்ததோ..! அது போன்றதொரு வரவேற்பு அந்தகன் படத்திற்கு கிடைத்தது. இதற்காக அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

நடிகை ப்ரியா ஆனந்த் பேசுகையில், "இந்தப் படம் எனக்கு மிகவும் ஸ்பெஷல். இந்தப் படத்தின் பணிகள் தொடங்கும் போது மிகவும் பாசிட்டிவாக இருந்தது. படம் வெளியான பிறகும் ரசிகர்களிடமிருந்தும் விமர்சகர்களிடமிருந்தும் பாசிட்டிவான விஷயங்கள் வந்து கொண்டே இருக்கிறது. அனைத்தும் ஒருமித்த விஷயமாக இருப்பதால் எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

90ஸ் ஸ்டார் பிரசாந்த்- சிம்ரன் என்று சொல்லலாம். இப்போதும் அவர்கள் அப்படியே தான் இருக்கிறார்கள். இவர்கள் தொடர்ந்து படங்களில் நடிக்க வேண்டும் என விரும்புகிறேன்.

படப்பிடிப்பு தளத்தில் இயல்பாகவும், அமைதியாகவும் இருப்பவர் இயக்குநர் தியாகராஜன். அவர் தொடர்ந்து படங்களை இயக்க வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக இன்றைய இளம் தலைமுறைக்கு ஏற்ற வகையில் காதல் கதைகளை அவர் இயக்க வேண்டும்.

அந்தகன் போன்ற மிகப்பெரிய வெற்றி படத்தில் ஒரு பகுதியாக இருந்ததற்கு பெருமிதம் அடைகிறேன். இந்தப் படத்தை வெற்றி பெற செய்த பிரசாந்தின் ரசிகர்களுக்கும், மக்களுக்கும் நன்றி," என்றார்.

இயக்குநர் கே. எஸ். ரவிக்குமார் பேசுகையில், "அந்தகன் படத்தின் வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கும் ஏராளமான ஊடகங்களை வரவேற்கிறேன். ஊடகங்களின் வளர்ச்சி அதிகரித்திருப்பதை காண்கிறேன். இது ஆரோக்கியமானது.

தற்போது திரைப்படங்களை உருவாக்குவது எளிது. அதை வெளியிடுவது கடினம். அதன் பிறகு அந்த திரைப்படம் வெற்றி பெறுவது அதைவிட கடினம். நல்ல படத்திற்கு கூட மக்கள் திரையரங்கத்திற்கு வருகை தருவதில்லை. பைரசியிலோ, ஓ டி டி யிலோ வந்து விடும். அதில் பார்க்கலாம் என்கிறார்கள். நட்சத்திர நடிகர்கள் நடித்திருக்கிறார்கள் என்றால் மட்டுமே அவர்களுடைய ரசிகர்கள் திரையரங்கத்திற்கு சென்று பார்க்கிறார்கள்.

இதையெல்லாம் மீறி அந்தகன் படம் வெற்றி பெற்று இருக்கிறது என்றால் அதுதான் நிஜமான வெற்றி. படத்தைப் பற்றி வெளியான விமர்சனங்கள் அனைத்தும் சிறப்பானதாக இருந்தன.

இயக்குநர் தியாகராஜன் பேசுகையில், "அந்தகன் படத்தை மக்களிடம் நல்ல முறையில் சென்றடைய செய்த அனைத்து ஊடகத்தினருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் படம் வெளியான பிறகு ஊடகத்திடமிருந்து வெளியான விமர்சனங்கள் மக்களை சென்றடைந்து படத்தை வெற்றி பெற வைத்திருக்கிறது. இந்தப் படத்தில் நடித்த நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

இந்தப் படத்தில் சிறிய வேடத்திற்கு கூட திறமையான கலைஞர்களை தேர்வு செய்து நடிக்க வைத்தோம். திரையரங்குகளில் மறைந்த நடிகர் மனோபாலாவின் வசனங்களுக்கும், வனிதா விஜயகுமார் பேசும் வசனங்களுக்கும் கைதட்டல் கிடைக்கிறது என்றால் அதற்கு அவர்களுடைய கடுமையான உழைப்பும் ஒரு காரணம்.

பிரியா ஆனந்த் நடிப்பு ரியலிஸ்டிக்காக இருந்தது. அவருடைய அழகு - சிரிப்பு- டயலாக் டெலிவரி- என எல்லாம் சிறப்பாக இருந்தது.

இந்தத் திரைப்படத்தில் பிரசாந்த் நாயகனாக இருந்தாலும் அனைத்து கேரக்டருக்கும் சமமான வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்..

முதலில் இந்த திரைப்படத்தை ஜெயம் ராஜா இயக்குவதாக இருந்தது. அவருடன் மூன்று மாதம் இணைந்து பயணித்தோம். இந்த மூன்று மாத காலத்திற்குள் அவர் லண்டனில் உள்ள வெளிநாட்டு நடிகை ஒருவர் இந்த கதாபாத்திரத்தில் நடித்தால் சிறப்பாக இருக்கும் என்று சொன்னார். அவருடனும் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர் கேட்ட சம்பளத்தையும் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டோம். மூன்று மாதத்திற்கு பிறகு ஜெயம் ராஜாவிற்கு சிரஞ்சீவி நடிக்கும் படம் ஒன்றை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது அந்தப் படத்தை இயக்கி நிறைவு செய்த பிறகு இந்த படத்தில் பணியாற்றுகிறேன் என ஜெயம் ராஜா சொன்னார்.□ நான் நன்றி என்று சொல்லிவிட்டு, உங்களுடைய பயணத்தை வெற்றிகரமாக தொடருங்கள் என்றேன்.

அதன் பிறகு நான் இயக்க தீர்மானித்தேன். அந்த கதாபாத்திரத்திற்கு யாரை நடிக்க வைப்பது என்பது குறித்து யோசிக்க தொடங்கினோம். அப்போது சிம்ரனை தவிர வேறு யாரும் என் எண்ணத்தில் வரவில்லை. அவரும் நடிக்க ஒப்புக்கொண்டு பெரிய அளவில் பேராதரவை வழங்கினார். அவர் மேடையில் தமிழில் பேசியதை மிகவும் ரசித்தேன்.

'டாப் ஸ்டார்' பிரசாந்த் பேசுகையில், "அந்தகன் படத்தை மிகப்பெரிய அளவில் வெற்றி பெறச் செய்த ஊடகத்தினருக்கும், ரசிகர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

படம் வெளியான தருணத்திலிருந்து இப்படத்தைப் பற்றிய விமர்சனம் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்தப் படத்தின் வெற்றிக்கு படத்தில் நடித்த கார்த்திக் போன்ற அனுபவமிக்க நட்சத்திரங்களும் மிக முக்கியமான காரணம். படப்பிடிப்பு தளத்தில் அவருடைய உற்சாகம் ஒட்டுமொத்த குழுவினருக்கும் உத்வேகத்தை அளித்தது.

சமுத்திரக்கனி, கே. எஸ். ரவிக்குமார், ஊர்வசி, யோகி பாபு போன்ற நட்சத்திர நடிகர்களுடன் இணைந்து நடித்த அனுபவமும் மறக்க முடியாதது. நான் ஏராளமான வெற்றி படங்களில் நடித்திருந்தாலும் இந்தப் படத்தில் நடிக்கும் போது எனக்கு கிடைத்த அனுபவம் வித்தியாசமானதாக இருந்தது. குறிப்பாக நான் இன்றும் மதிக்கும் இயக்குநரான கே. எஸ். ரவிக்குமார் , ஊர்வசி, யோகி பாபு இவர்களுடன் படப்பிடிப்பு தளத்தில் பணியாற்றிய போது ஒவ்வொரு நாளும் படமாக்கப்படும் காட்சியை முழுதாக புரிந்து கொண்டு அந்த காட்சியை எப்படி மேம்படுத்தலாம் என திட்டமிட்டு, அதற்கு ஒத்திகை பார்த்து நடித்தோம். 60களில் நடிகர்கள் எப்படி நடித்தார்கள், 70களில் நடிகர்கள் எப்படி நடித்தார்கள், 80களில் நடிகர்கள் எப்படி நடித்தார்கள் என்பதனை உடன் பணியாற்றிய கலைஞர்களுடன் பேசி விசயங்களை கேட்டு நடித்தோம். குறிப்பாக நாகேஷ், பானுமதி அம்மா, நம்பியார் போன்றவர்களின் நடிப்பு எப்படி இருந்தது என்பதனை அவர்களுடன் அருகில் இருந்து பணியாற்றிய உதவியாளர்களிடமிருந்து கேட்டு தெரிந்து கொண்டேன். இதுபோன்ற அனுபவம் எனக்கு மீண்டும் 'அந்தகன்' படத்தில் கிடைத்தது. இதனால் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

தற்போது நம்மிடம் இல்லாத, இந்த படத்தில் நடித்த நடிகர் மனோபாலா உடன் நடித்த அனுபவமும் மறக்க முடியாது. அவர் என்னுடைய தந்தையார் இயக்கிய அனைத்து படத்திலும் நடித்திருந்தார். என்னுடனும் பல படங்களில் நடித்திருந்தார். இந்த படத்தின் வெற்றிக்கு அவருடைய ஆசியும் ஒரு காரணம்.

நானும், சிம்ரனும் நடித்த படங்கள் அனைத்தும் வெற்றி பெற்றிருக்கின்றன. அந்த வரிசையில் அந்தகனும் இடம் பிடித்திருக்கிறது. இதற்காக சிம்ரனுக்கு பிரத்யேகமாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

படப்பிடிப்பு தளத்திலும், படப்பிடிப்பை நிறைவு செய்த பிறகும் என் வளர்ச்சியின் மீது அக்கறை காட்டி வரும் நடிகை பிரியா ஆனந்திற்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# தளபதி விஜய் நடிக்கும் 'கோட்' படத்தின் முன்னோட்டம் திரையிடல் & பத்திரிகையாளர் சந்திப்பு

## ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் இருபத்தைந்தாவது படமாக தயாராகி, தளபதி விஜய் நடிப்பில் உருவாகி, ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் 'கோட்' திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டிருக்கிறது



சென்னை, 17 ஆகஸ்ட் 2024: ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் நிறுவனம் சார்பில் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ், கல்பாத்தி எஸ். சுரேஷ் ஆகியோரின் தயாரிப்பில், வெங்கட் பிரபு இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்' ('கோட்') திரைப்படத்தில் தளபதி விஜய், பிரசாந்த், பிரபுதேவா, மோகன், ஜெயராம், அஜ்மல் அமீர், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி, யோகி பாபு , வைபவ், பிரேம்ஜி அமரன், யுகேந்திரன், பார்வதி நாயர், விடிவி கணேஷ், அரவிந்த் ஆகாஷ், அஜய் ராஜ், கஞ்சா கருப்பு உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். இப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி மற்றும் அசோசியேட் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் ஐஸ்வர்யா கல்பாத்தி, தயாரிப்பாளர்கள் ஏ ஜி எஸ் எண்டர்டெயிண்மெண்ட் கல்பாத்தி எஸ் அகோரம், கல்பாத்தி எஸ் கணேஷ், கல்பாத்தி எஸ் சுரேஷ், கிரியேடிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி ஆவர். சித்தார்த்தா நுனி ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார்.

ஆக்ஷன் எண்டர்டெயினராக தயாராகி செப்டம்பர் மாதம் ஐந்தாம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவிருக்கும் 'கோட்' திரைப்படத்தின் முன்னோட்ட வெளியீட்டை முன்னிட்டு சென்னையில் நடைபெற்ற விழாவில் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, படத்தின் இயக்குநர் வெங்கட் பிரபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

'கோட்' திரைப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி பேசுகையில், "எங்கள் நிறுவனத்தின் 25வது படமாக 'கோட்' உருவாகி இருக்கிறது. தளபதி விஜய்யுடன் 'பிகில்' படத்திற்குப் பிறகு நாங்கள் இணைந்திருக்கும் இரண்டாவது திரைப்படம். இது எங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு. எங்கள் நிறுவனத்திற்காக வெங்கட் பிரபு இயக்கும் முதல் படம் இது.

இப்படத்தின் பணிகள் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் நடைபெற்றன. படமும் நன்றாக வந்திருக்கிறது. இந்த திரைப்படம் தொழில்நுட்ப ரீதியில் மிகவும் வலுவான படைப்பு. ஏராளமான வெளிநாடுகளில் இப்படத்தின் படப்பிடிப்பை நடத்தி இருக்கிறோம். விஜய் சார் நடிக்கும் படத்தில் அதிகளவு வெளிநாடுகளில் படமாக்கப்பட்ட படம் இதுதான்.

இந்த தருணத்தில் படத்தின் முன்னோட்டத்தை உங்களுக்காக திரையிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம். எங்கள் நிறுவனத்திற்கும், இந்த திரைப்படத்திற்கும் தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன், " என்றார்.

இயக்குநர் வெங்கட் பிரபு பேசுகையில், ''என்னுடைய திரையுலக பயணத்தில் இது மறக்க முடியாத பயணம். இந்த படத்தின் பணிகள் எப்படி தொடங்கியது, எப்படி நிறைவடைந்தது என்றே தெரியவில்லை. இதற்காக அர்ச்சனா கல்பாத்திக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவரை முதன்முதலாக சந்தித்து இந்த கதையை விவரித்தேன். அப்போது அவரும் ஆர்வமாகி இந்த படைப்பை உருவாக்குவது குறித்து விவாதிக்க தொடங்கினார்.

பின்னர் விஜய்யை சந்தித்து கதை சொல்லும் வாய்ப்பு கிடைத்தது. அதன் பிறகு விஜய் - ஏஜிஎஸ் நிறுவனம் இருவரும் இணைந்தார்கள். கதையைக் கேட்டு ரசித்த தயாரிப்பாளர் கல்பாத்தி எஸ். அகோரம் அவர்கள், ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் 25வது படத்திற்காக விஜய்யுடன் மீண்டும் இணைவது மிக்க மகிழ்ச்சி. செலவைப் பற்றி கவலைப்படாமல் உலகத் தரத்திலான படத்தை உருவாக்குங்கள் என்றார். இதனால் பட்ஜெட்டை பற்றி கவலைப்படாமல் பெரிதாக யோசிக்கத் தொடங்கினேன்.

இந்தப் படத்திற்காக படப்பிடிப்பு தளத்தை பார்வையிடுவதற்காகவே இஸ்தான்புல் நகரத்திற்குச் சென்றோம். ஆனால் அங்கு பணியாற்ற முடியாத சூழல் இருந்தது. அதனால் படப்பிடிப்பை ரஷ்யாவில் நடத்தினோம். நாங்கள் படப்பிடிப்பை நடத்திய காலத்தில் அந்த நாட்டில் பெரிய பிரச்சினை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் இந்த படத்தின் படப்பிடிப்பு அனுபவம் மறக்க முடியாதது.

இந்தப் படத்தினை அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸில் தான் தொடங்கினோம். இந்த படத்திற்காக உலகத்தில் சிறந்த தொழில்நுட்ப நிறுவனமான 'லோலா' உடன் இணைந்தோம். இந்நிறுவனம் ஏராளமான ஹாலிவுட் திரைப்படங்களில் பணியாற்றியிருக்கிறது. இவர்களுடன் இணைந்து பணியாற்றுவதில் முதலில் சற்று தயக்கம் இருந்தது. ஏனெனில் வித்தியாசமாக யோசித்த விசயத்தை எப்படி சாத்தியப்படுத்துவது? இதற்காக என்னுடைய குழுவினருக்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

படத்தில் ஆக்ஷன் காட்சிகள் நிறைய உண்டு. இதனால் திலீப் மாஸ்டர் கடுமையாக உழைத்திருக்கிறார். ஒளிப்பதிவாளர் சித்தார்த்தா- கலை இயக்குநர் ராஜீவன் - ஆடை வடிவமைப்பாளர் பல்லவி சிங் மற்றும் வாசுகி பாஸ்கர், கதாபாத்திரத்தை வடிவமைத்த மும்பையை சேர்ந்த பிரீத்தி ஷீல் சிங்- இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா- என அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த படத்தை பார்த்துவிட்டு வெளியே வரும்போது அனைத்து பாடல்களும் உங்களுக்கு பிடிக்கும், அனைத்தும் விஷுவல் ட்ரீட் ஆகவும் இருக்கும்.

படத்தின் தயாரிப்பாளர்கள் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ் மற்றும் கல்பாத்தி எஸ். சுரேஷ் ஆகியோர் படத்தைப் பார்த்துவிட்டு பாராட்டினார்கள். இது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவர்களுடைய ஆதரவுக்கு மிக்க நன்றி.

விஜய்யை தவிர பிரசாந்த், பிரபுதேவா, மோகன், ஜெயராம், சினேகா, யோகி பாபு , மீனாட்சி என ஏராளமானவர்கள் நடித்திருக்கிறார்கள். இது போன்ற மிகப்பெரிய பட்ஜெட் படத்தில் அனைவரும் இணைந்து நடிப்பதற்காக ஒப்புக்கொண்டது பெரிய விஷயம். இதுவே எனக்கு மகிழ்ச்சியையும் தந்தது.

இந்தப் படம் ஒரு நேர்த்தியான, கமர்ஷியலான எண்டர்டெயின்மென்ட் படம். விஜய் சாரை இது போன்றதொரு கமர்சியலான படத்தில் பார்க்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. அது நிறைவேறி இருக்கிறது. படத்தில் பொழுதுபோக்கு அம்சங்கள் மட்டுமில்லாமல் கதையும் இருக்கிறது.

'கோட்' செப்டம்பர் 5 ம் தேதி வெளியாகிறது. படம் பார்த்துவிட்டு சொல்லுங்கள்.

இது விஜய் சார் படம் என்றாலும் அனைவரும் இதில் தங்களுக்கு முக்கியத்துவம் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். அதே சமயத்தில் முக்கியத்துவம் இருந்தால்தான் அவர்கள் நடிக்க ஒப்புக் கொள்வார்கள். அதனால் இந்த படத்தில் நடித்திருக்கும் அனைத்து கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

படத்தின் இறுதி கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தணிக்கைக்காக படம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் முதன் முதலாக வசனகர்த்தா விஜியுடன் இணைந்து பணியாற்றி இருக்கிறேன்.

இந்தப் படம் விஜய்யின் ரசிகர்களுக்கு ஸ்பெஷலான விருந்தாக இருக்கும். 'கோட்' பக்கா கமர்ஷியலான திரைப்படம் தான். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பு ரசிகர்களை கவரும் வகையில் இந்தப் படம் உருவாகி இருக்கிறது. எந்த இடத்திலும் முகத்தை சுழிக்கும் காட்சிகள் இல்லை. இந்த படத்தை பார்த்துவிட்டு ஆசியையும், ஆதரவையும் வழங்குங்கள்," என்றார்.

இதனைத் தொடர்ந்து படத்தைப் பற்றி பத்திரிகையாளர்களின் கேள்விக்கு கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி மற்றும் இயக்குநர் வெங்கட் பிரபு பதிலளித்தனர்.

# திசையன்விளை அருகே கோயில் கரகாட்ட நிகழ்ச்சியில் தகராறு: சகோதரர்கள் 2 பேர் குத்திக்கொலை



சென்னை, 17 ஆகஸ்ட் 2024: திசையன்விளை அருகே கோயில் கரகாட்ட நிகழ்ச்சியில் ஏற்பட்ட தகராறில் சகோதரர்கள் 2 பேர் குத்தி கொலை செய்யப்பட்டனர்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை அருகே காரம்பாடு கிராமத்தில் ஓடைக்கரை சுடலைமாடசாமி திருக்கோவில் கொடை விழா நேற்று இரவு நடைபெற்றது. இந்த கொடை விழாவில் கரகாட்ட நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த ஒரே சமுதாயத்தைச் சேர்ந்த இரு பிரிவினருக்கு இடையே வாய்த்தகறாறு ஏற்பட்டுள்ளது.

ஒருகட்டத்தில் வாய்த்தகராறு முற்றிய நிலையில், கைகலப்பாக மாறி ஒரு குழுவைச் சேர்ந்த இளைஞர், மற்றொரு பிரிவைச் சேர்ந்த அண்ணன் தம்பியை கத்தியால் குத்தியுள்ளார். இதில், படுகாயமடைந்த மதிராஜா மற்றும் மதியழகன் ஆகிய சகோதரர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த இவர்களின் மற்றொரு சகோதரர் மகேஷ்வரன், ஆபத்தான நிலையில் நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், இறந்தவர்களின் சடலங்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்துவிட்டு, விசாரணை செய்து வருகின்றனர். நெல்லை எஸ்பி சிலம்பரசன் விடுப்பில் இருப்பதால் குமரி மாவட்ட எஸ்பி தலைமையிலான காவல்துறையினர் தீவிர விசாரணை செய்து குற்றவாளிகளை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பாலா இயக்கத்தில் அருண்விஜய் நடித்துள்ள 'வணங்கான்' படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது



சென்னை, 17 ஆகஸ்ட் 2024: இயக்குநர் பாலா இயக்கத்தில் அருண்விஜய் நடிப்பில் தயாராகி வரும் படம் 'வணங்கான்'. வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் சார்பாக தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி இந்தப்படத்தை தயாரித்து வருகிறார். கதாநாயகியாக ரோஷினி பிரகாஷ் நடிக்கிறார். மற்றொரு நாயகியாக ரிதா நடித்துள்ளார். முக்கிய வேடங்களில் சமுத்திரக்கனி, மிஷ்கின் ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

பாடல்களுக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க, சாம் சி.எஸ் பின்னணி இசையமைக்கிறார். பாடல்களை கார்த்திக் நேத்தா எழுதியுள்ளார். ஒளிப்பதிவை ஆர்.பி.குருதேவ் மேற்கொள்ள, சண்டைப்பயிற்சி இயக்குநராகப் பணியாற்றியுள்ளார் ஸ்டண்ட் சில்வா. கலை இயக்குநராக ஆர்.பி.நாகு பொறுப்பேற்றுள்ளார். பாலா-அருண்விஜய் கூட்டணியில் உருவாகும் படம் என்பதாலும் ஏற்கனவே வெளியான 'வணங்கான்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீசர் ஆகியவை ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றதாலும் படத்தின் மீதான எதிர்பார்ப்பு இருமடங்காகி இருக்கிறது.

இந்நிலையில் 'வணங்கான்' படம் சென்சார் சான்றிதழுக்காக தணிக்கை அதிகாரிகளுக்கு திரையிட்டு காண்பிக்கப்பட்டது. படத்தைப் பார்த்த அதிகாரிகள் 'வணங்கானு'க்கு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

'வணங்கான்' படத்தின் இசை வெளியீடு மற்றும் ரிலீஸ் குறித்த விவரங்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

# தமிழக முதல்வர், பிரயாஸ் ட்ரஸ்ட் தலைவர் மீனா சுப்ரமணியனுக்கு சிறந்த சமூக சேவகி விருது வழங்கி கௌரவித்தார்!

சென்னை, 17 ஆகஸ்ட் 2024: பிரயாஸ் அறக்கட்டளையின் தலைவர் திருமதி,.மீனா சுப்ரமணியனுக்கு பெரும் மதிப்புமிக்க சிறந்த சமூக சேவகி விருதை மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம்.கே. ஸ்டாலின் வழங்கி கௌரவித்தார். சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், தமிழ் நாடு முதலமைச்சர் இவ்விருதினை வழங்கினார். தமிழ்நாட்டில் பெண்கள் நலனுக்காக அவர் ஆற்றிவரும் மிகச்சிறப்பான பங்களிப்பை அங்கீகரித்து கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது.

"இந்த விருதைப் பெறுவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன்" என்று பிரயாஸ் டிரஸ்ட். தலைவர், திருமதி. மீனா சுப்ரமணியன் கூறினார். "இந்த மாபெரும் அங்கீகாரம், சமூக நலன் மற்றும் பெண்கள் நலன் மீது அக்கறையுடனும், அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வரும் எங்களது குழுவின் கூட்டு முயற்சிகளுக்கும், எங்கள் நன்கொடையாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் இடைவிடாத ஆதரவிற்கும் மிகச்சிறந்த சான்றாக அமைந்திருக்கிறது. பெண்கள் தங்களது வாழ்வாதரத்திற்கு சுயமாக செயல்படுவதற்காக வாய்ப்புகளை உருவாக்குவதிலும், பின்தங்கிய சமூகங்களை மேம்படுத்துவதிலும் நாங்கள் தொடர்ந்து உறுதியுடன் செயல்படுவோம்.'' என்று அவர் மேலும் கூறினார்.

1996-ம் ஆண்டு நிறுவப்பட்ட பிரயாஸ் ட்ரஸ்ட், எல் & டி ஊழியர்கள் அடங்கிய ஒரு சிறிய குழுவிலிருந்து ஆரம்பித்து, இன்று சுகாதாரம், கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் சமூக மேம்பாடு ஆகிய தளங்களில் முழுக் கவனம் செலுத்தி வரும் இந்திய அளவிலான ஒரு நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திருமதி. மீனா சுப்பிரமணியன் தலைமையில் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் மூலம், பிரயாஸ் ட்ரஸ்ட், சமூகத்தில் நலிவுற்ற, பின்தங்கிய ஆயிரக்கணக்கான தனிநபர்களுக்கு வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகளை உருவாக்கி கொடுத்துள்ளது.

பிரயாஸ் ட்ரஸ்ட்டின் மருத்துவ மையம், ஆண்டுதோறும் 60,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு அத்தியாவசியமான சுகாதார சேவையை வழங்கி வருகிறது. அதே நேரத்தில் அதன் டயாலிசிஸ் பிரிவு ஒவ்வொரு மாதமும் சுமார் 400 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது. இந்த ட்ரஸ்ட்டினால் நிறுவப்பட்ட கல்வி மையங்களின் மூலம் மாதந்தோறும் 150 சிறுவர், சிறுமிகள் பயனடைந்து வருகிறார்கள். இதன் தையல் பிரிவுகள் ஒவ்வொரு ஆண்டும், சமூகத்தில் நலிவுற்ற வசதிவாய்ப்புகள் குறைந்த 80 பெண்களுக்கு பயனளித்து வருகிறது. அதேபோல், மொபைல் பொம்மை வேன்கள் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3,600-க்கும் அதிகமான மாணவ - மாணவிகளுக்கு கற்றல் வாய்ப்புகளையும் அறிவு சார்ந்த வேடிக்கையான அம்சங்களையும் வழங்கி வருகிறது. இந்த ட்ரஸ்ட்டின் நடமாடும் மருத்துவ நிலையங்கள், சென்னை பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட 11 பகுதிகளில் வசதி வாய்ப்புகள் குறைந்த மக்களுக்கு உதவி செய்து வருகிறது. இந்த முன்முயற்சிகளில் பல முயற்சிகள், தமிழ்நாடு அரசின் பல்வேறு அரசுத் துறைகளுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

2018-ம் ஆண்டில் பிரயாஸ் ட்ரஸ்ட், தமிழ்நாட்டின் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பாண்டூர், இரும்புலிச்சேரி மற்றும் இடையாத்துார் ஆகிய கிராமங்களில் பொருளாதார வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மனித மூலதனக் கட்டமைப்பில் கவனம் செலுத்தும் வகையில் ஒரு விரிவான ஊரக மேம்பாட்டு முயற்சியை மேற்கொண்டது. மேலும், திருமதி. மீனா சுப்ரமணியன் அவர்கள் எல் & டி -ன் பெருநிறுவன சமுகப்பொறுப்புணர்வு சார்ந்த செயல்பாட்டு முயற்சிகள் மற்றும் பிரயாஸ் ட்ரஸ்ட் மூலம் இந்திய கலை மற்றும் கலைஞர்களை ஊக்குவிப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

அடுத்தடுத்த முயற்சிகளை முன்னெடுத்து செல்லும் வகையில், பிரயாஸ் ட்ரஸ்ட் மகளிர் சுயஉதவி குழுக்களை வலுப்படுத்துவதையும், பெண்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டங்களை விரிவுபடுத்துவதையும் தனது நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பெண்கள் திறன் மேம்பாட்டு திட்டத்தில் ஆரி வேலை, அழகுக்கலைப் படிப்புகள் மற்றும் முழுமையான வசதிகளுடன் கூடிய டியூஷன் சென்டர்களும் அடங்கும்.

# சென்னை மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன் ''ஆன்கோ ரைட் '', உடனடி தேசிய காமன் மொபிலிட்டி கார்டு மேம்படுத்தப்பட்ட பயண அனுபவத்தை வழங்குவதற்காக அறிமுகப்படுத்துகிறது



சென்னை, 17 ஆகஸ்ட் 2024: இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த ஓம்னிசேனல் பேமெண்ட் வழங்குனர்களில் ஒன்றான ஏ ஜி எஸ் ட்ரான்சாக்ட் டெக்னாலஜிஸ் டிஜிட்டல் பேமெண்ட் தளமான ஆன்கோ , இன்ஸ்டண்ட் நேஷனல் காமன் மொபிலிட்டி கார்டு (என்சிஎம்சி) ஆன 'ஆன்கோ ரைட் 'யை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் (சிஎம்ஆர்எல்) இன்று அறிமுகப்படுத்தியது. மொபிலிட்டி கார்டுயான ''ஆன்கோ ரைட் ' கார்டுகளை உடனுக்குடன் வழங்குவதற்கும், பயணிகளுக்கு மேம்பட்ட பயண அனுபவத்தை வழங்குவதற்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட 13 சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் தனித்துவமான கார்டு வழங்கும் கருவிகளை ஆன்கோ நிறுவியுள்ளது. விரைவில், சென்னையில் உள்ள கூடுதல் மெட்ரோ ரயில் நிலையங்களில் ''ஆன்கோ ரைட்' கருவிகளை இந்நிறுவனம் வழங்கவுள்ளது .

'ஆன்கோ ரைட்' இன் முக்கிய யூ எஸ் பி ஆனது உடனடி அட்டை வழங்கும் செயல்முறையாகும். பயணிகள் இந்த கார்டு விநியோகிப்பாளர்களிடமிருந்து ரூ. 100க்கு ''ஆன்கோ ரைட் 'கார்டுகளை மூன்று எளிய படிகளில் வாங்கலாம்: கார்டைத் தேர்ந்தெடுக்கவும் - யூ பி ஐ மூலம் பணம் செலுத்தவும் - பயன்படுத்தத் தயாராக இருக்கும் ''ஆன்கோ ரைட்' கார்டைச் சேகரிக்கவும். ஒவ்வொரு கார்டும் 50 ரூபாய் இருப்புடன் முன் ஏற்றப்பட்டு வருகிறது. பயணிகள் தங்களுடைய 'ஆன்கோ ரைட்' கார்டுகளை அனைத்து சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களிலும் உள்ள டிக்கெட் கவுன்டர்களில் வசதியாக நிரப்பிக் கொள்ளலாம். இந்த நெறிப்படுத்தப்பட்ட செயல்முறையானது, இந்தியா முழுவதும் என் சி எம் சி களை விரைவாக செயல்படுத்தி மற்றும் ஊக்குவிக்கும் விதமாக விரைவான ஓவர்-தி-கவுண்டர் அனுபவத்தை வழங்குகிறது.

நாட்டிலுள்ள 12 மெட்ரோ அமைப்புகளில் ஒன்றான சென்னை மெட்ரோவில் ஜூலை 2024 படி ஒரு மாதத்தில் 95+ லட்சம் பேர் பயணித்துயிருக்கிறார்கள் மேலும் 35+ லட்சம் மூடிய -லூப் மெட்ரோ கார்டு பயனர்கள் உள்ளனர். மொபிலிட்டி கார்டு (என் சி எம் சி), பயணிகளுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கட்டண தீர்வை வழங்குகிறது, இது பெருநகரங்கள், பேருந்துகள் மற்றும் நீர் படகுகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் மற்றும் சுங்கச்சாவடிகள் போன்ற பல்வேறு போக்குவரத்து முறைகளை தடையின்றி ஒருங்கிணைக்கிறது. மேலும், புதுப்பிக்கப்பட்ட ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல்களின்படி, டிரான்ஸிட் பேமெண்ட்டுகளைச் செய்வதற்கு முழு கே ஒய் சி இதற்கு தேவையில்லை.

ஏ ஜி எஸ் ட்ரான்சாக்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ரவி பி. கோயல் கூறுகையில், "நவீன காலப் பயணிகளுக்காக சென்னை மெட்ரோவில் வடிவமைக்கப்பட்ட உடனடி நேஷனல் காமன் மொபிலிட்டி கார்டு (என் சி எம் சி) 'ஆன்கோ ரைட்' ஐ அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மெட்ரோ ரயில்கள் நகர்ப்புற இயக்கம் உள்கட்டமைப்பின் ஒரு மூலக்கல்லாகும், இந்தியாவில் தினசரி சுமார் 10 மில்லியன் மெட்ரோ பயணிகளை அனுபவிக்கிறது. ஏ ஜி எஸ் பரிவர்த்தனையில், என் சி எம் சிகள் நாடு முழுவதும் இயக்கத்தை மாற்றும் ஆற்றலைக் கொண்டிருப்பதாக நாங்கள் நம்புகிறோம். எங்களின் தனித்துவமான என் சி எம் சி கார்டு விநியோகிப்பாளர்களுடன், நாங்கள் வழங்கும் செயல்முறையை எளிதாக்குகிறோம், மேலும் 'ஆன்கோ ரைட்' மூலம் அனைத்து என் சி எம் சி-இயக்கப்பட்ட போக்குவரத்து சேவைகளுக்கும் தடையற்ற அணுகலை செயல்படுத்துகிறோம். பயணத்தின்போது பயணிகளுக்கு இணையற்ற வசதியை வழங்குவதே எங்களது குறிக்கோளாகும் .

இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் வங்கிகள் மற்றும் வங்கி அல்லாத பிபிஐ நிறுவனங்கள் ட்ரான்ஸிட் பேமெண்ட்டுகளுக்காக கேஒய்சி இல்லாமல் தேசிய பொது மொபிலிட்டி கார்டுகளை (என்சிஎம்சி) வழங்க அனுமதிக்கும் விதிகளை சமீபத்தில் புதுப்பித்துள்ளது. பயணிகள் தங்களின் ஆன்கோ ரைட் கார்டுகளை அதிகபட்சமாக ரூ. 3,000 டிக்கெட் கவுன்டர்களில் டாப் அப் செய்துகொள்ளலாம் . இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து என் சி எம் சி-இயக்கப்பட்ட புள்ளிகளிலும் 'ஆன்கோ ரைட்' உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், ஆன்லைன்/இ-காமர்ஸ் ஷாப்பிங் அல்லது ஸ்டோரில் உள்ள உணவு அனுபவங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளுக்காக இது அல்ல.

# 7.5% அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் பொறியியல் மாணவர்களின் கல்விக் கட்டணங்களை அரசு ஏற்கும்

சென்னை, 17 ஆகஸ்ட் 2024: 7.5% அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் பொறியியல் மாணவர்களின் கல்வி கட்டணங்களை அரசு ஏற்கும் என தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அரசுப் பள்ளிகளில் படித்து பொறியியல் கல்லூரிகளில் ஒற்றை சாளர முறையில் 7.5% முன்னுரிமையின் அடிப்படையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேரும் மாணாக்கர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவீனங்களான, படிப்புக் கட்டணம், விடுதிக் கட்டணம் அல்லது போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசே வழங்கும் என தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

எந்த வித கட்டணங்களையும் மேற்படி இட ஒதுக்கீட்டில் சேரும் மாணாக்கர்களிடம் வசூலிக்கக் கூடாது என அனைத்துப் பொறியியல் கல்லூரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் ஒற்றை சாளர கலந்தாயிவின் மூலம் சேர்க்கைப் பெறும் முதல் பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்வி கட்டண சலுகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது . எனவே பொறியியல் கல்லூரிகளில் சேரும் முதல் பட்டதாரி மாணாக்கர்களிடம் கல்விக் கட்டணம் வசூலிக்க கூடாது என தெரியப்படுத்தப்படுகிறது.

சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் அரசு ஒதுக்கீடு செய்யும் இலவச, கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவ மதம் மாறிய மாணவ மாணவியரின் பெற்றோர், பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்து-க்குள் உள்ளவர்களுக்கு கட்டாய, திருப்பி செலுத்தப்படாத அனைத்துக் கல்வி கட்டணங்களும் வழங்கப்படும்.

மேலும் அக்கட்டணங்கள் அனைத்தும் மாணாக்கர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டப்பின் மாணவர்கள் அக்கட்டணங்களை அவர்கள் பயிலும் கல்லூரிக்கு செலுத்த வேண்டும். அவ்வாறு மாணவர்களின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கும் முன்னர் மேற்படி இட ஒதுக்கீட்டில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடம் எந்த வித கட்டணங்களையும் வசூலிக்கக் கூடாது என தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும் அரசின் மேற்படி ஆணைகளை மீறி சில பொறியியல் கல்லூரிகள் கலந்தாய்வின் வழி அரசு ஒதுக்கீட்டில் சேர வரும் மாணவ மாணவிகளிடமிருந்து அனைத்துக் கட்டணங்களையும் செலுத்த வற்புறுத்தப்படுவதாக புகார்கள் பெறப்படுகின்றன. எனவே, அரசு ஒதுக்கீட்டில் கலந்தாய்வின் மூலம் சேர்க்கைக்கு வரும் மேற்கண்ட பயனாளிகளிடமிருந்து கட்டணங்களை பொறியியல் கல்லூரி நிர்வாகங்கள் வசூலிக்கக் கூடாது என கண்டிப்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இதனை மீறும் பொறியியல் கல்லூரிகளின் நிர்வாகம் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜோயாலுக்காஸ் வைர நகை கண்காட்சி ஆகஸ்ட் 15 முதல் செப். 1, 2024 வரை, கோவை கிராஸ்கட் ரோடு ஜோயாலுக்காஸ் ஷோரூமில்




கோயம்புத்தூர், 17 ஆகஸ்ட் 2024: தலைசிறந்த ஆபரணங்களின் அழகை கொண்டாடுபவர்களுக்கு, வைர நகை பிரியர்களுக்கு ஜோயாலுக்காஸ் நடத்தும் 'டைமண்ட் ஜுவல்லரி ஷோ' ஓர் அற்புத வாய்ப்பு. இந்த வருடத்தின் மிக முக்கியமான ஆபரண கண்காட்சியாக விளங்கும் இந்த டைமண்ட் ஜுவல்லரி ஷோ ஆகஸ்ட் 15 முதல் செப்டம்பர் 1 வரை நடைபெறுகிறது. ஜோயாலுக்காஸ் தன்னுடைய தலைசிறந்த கைவினைத் திறன் மற்றும் நேர்த்தியான வடிவமைப்பிற்காக உலக அளவில் புகழ்பெற்று விளங்குகிறது. தற்போது இந்த கண்காட்சிக்காக இதுவரை கண்டிராத வைரங்கள், அன்கட் வைரங்கள் மற்றும் பிரஷ்யஸ் கற்களை மிக நுணுக்கமான வேலைப்பாட்டில் மிக நேர்த்தியாக ஆபரணங்களில் வடிவமைத்துள்ளது. இத்தகைய விசேஷ ஆபரணங்கள் இந்த டைமண்ட் ஜுவல்லரி ஷோ-வில் மட்டுமே கிடைக்கும். இந்த கண்காட்சி குறித்து ஜோயாலுக்காஸின் நிர்வாக இயக்குனர் மற்றும் சேர்மன் திரு. ஜோய் ஆலுக்காஸ் அவர்கள் குறிப்பிட்டதாவது "தனித்துவமான ஜுவல்லரி கலெக்ஷன்கள் மட்டுமல்லாது மிக உயர்ந்த தர நிலை கொண்ட டிசைன்களையும் வழங்குவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி கொள்கிறோம், எங்களின் புகழ் பெற்ற இந்த நகைகள் கலைநுட்பத்துடன் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆபரண கண்காட்சிக்காகவே வடிவமைக்கப்பட்ட ஜுவல்லரிகள் நகை ஆர்வலர்களுக்கு, அவர்கள் விரும்பும் கலெக்ஷன்களை வாங்கிடும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்தி தருவது உறுதி"

இணையற்ற வடிவமைப்புகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த கைவினைத்திறனை வெளிப்படுத்தும் இந்த வைர நகை கண்காட்சியில் சிறப்பான சலுகைகளும் உள்ளன. ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள வைர நகைகளை வாங்கினால், 1 கிராம் தங்க நாணயம் இலவசமாக கிடைக்கும்.

கோவை கிராஸ்கட் ரோடு ஷோரூமில் நடைபெறும் இந்த ஜுவல்லரி கண்காட்சியில் நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்து விதமான வைர நகைகளையும், உலகின் ஈடு இணையற்ற ஆபரண கலெக்ஷன்களையும் ஒரே இடத்தில் பார்த்து மகிழலாம். அதே சமயம் மிகச்சிறந்த விலைகளில் சிறப்பு சலுகைகளில் உங்கள் மனம் கவர்ந்த வைர நகைகளை வாங்கி மகிழலாம்.